மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கள்ளக் கடத்தலைத் தடுப்பதற்கு நாம் கடுமையான நடவடிக்கை எடுத்திருக்கிறோம். கடுமையான தண்டனைக்கும் ஏற்பாடு செய்திருக்கிறோம். கள்ளக் கடத்தல் பற்றித் தெரிவிப்பவர்களுக்கு ரூ. 1,000 வரையில் சன்மானம் அளிப்பதாக அரசாங்கம் ஏற்கெனவே அறிவித்திருக்கிறது. கள்ளக் கடத்தலைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு எவ்வளவு மொத்தம் பிடித்துக் கொடுக்கிறார்களோ அதில் 10 சத விகிதம் பணம் இனாமாக அளிக்கப்படும் என்றும் ஏற்கெனவே அரசு அறிவித்திருக்கிறது. அந்தப் பகுதி மக்கள் கள்ளக் கடத்தலைப் பிடிப்பதற்கு அரசாங்கத்தோடு ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

Licences for powerlooms

* 164 *Q.*—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Industries be pleased to state the number of licences issued for running powerlooms in the State during 1970–71 and 1972?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: விசைத்தறிகள் ஓட்டுவதற்காக வழங்கப்பட்ட அனுமதிச் சீட்டுகளின் எண்ணிக்கை வருட வாரியாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

1970—ஒன்றுமில்லை.

1971—1,917 விசைத்தறிகளுக்காக, 574 அனுமதிச் சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன.

1972 (30-6-72 வரையில்) 622 விசைத்தறிகளுக்காக 248 அனுமதிச் சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன.

திரு. என். கே. பழனிசாமி: மெஷின் தறிகள் சேலை, போர்வை, இன்னும் வேட்டிகள் இவைகளை அதிகப்படியாக உற்பத்தி செய்வதாலும், 20 கைத்தறி நெசவாளர்கள் வேலையை ஒரே மெஷின் செய்யலாம் என்பதாலும், நெசவாளிகள் மத்தியில் நெருக்கடி ஏற்பட்டதற்கு இப்படி அதிகப்படியான லைசென்ஸ்கள் கொடுத்தது தான் காரணமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.

திரு. சு. துரைசாமி: நம்முடைய தமிழகத்தில் உற்பத்தியாகின்ற நூல் எல்லாம் தமிழ் நாட்டில் பயன்படுத்தாமல், பம்பாய் போன்ற வெளி மாநிலங்களுக்குச் சென்று, துணியாக நெய்யப்

பட்டு, தமிழ் நாட்டிற்கே திரும்பி வருகிறது. இப்பேர்ப்பட்ட போக்கை மாற்றுவதற்கு விசைத் தறிகளை வேகமாகக் கொண்டு வர அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 12,500 விசைத் தறிகள் கொடுப்பதற்கு முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

சிற்பக் கலை

***165 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

தமிழகத்தில் சிற்பக் கலையினைப் பாதுகாத்திட அரசு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கற்சிற்பக்கலையைப் பாதுகாப்பதற்காக மாமல்லபுரத்தில் சிற்பப் பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு கற்சிற்பக் கலைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. அங்கு உற்பத்திக்கூடம் ஒன்றும் இணைக்கப்பட்டு வெளியிலிருந்து வரும் தேவைகளுக்கேற்ப சிற்பங்கள் செய்து கொடுக்கப்படுகின்றன.

திரு. என். கிட்டப்பா : சிற்பக் கலைகளைப் பாதுகாக்கின்ற பொறுப்பைக் கூட மத்திய அரசாங்கம் மேற்கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறதே? அதையாவது மாநில அரசு மேற்கொண்டு செயல் முறைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பழைய சிலைகளைப் பாதுகாப்பது பற்றிச் சொல்கிறார்கள் என்று நினைக்கிறேன். அது பற்றி நம்முடைய அரசாங்கத்தின் சார்பிலே மாநிலத்தினுடைய பொறுப்பில் வரவேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

பட்டு உற்பத்தி

***166 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் பட்டு உற்பத்தியினை அதிகரிக்கச் செய்ய 'மல்பரி' மரங்கள் வளர்க்கும் திட்டம் ஒன்று செயல்பட்டு வருகின்றதா?